# துவாக்குடி நகராட்சி

| Date of Meeting of the Council | MCR No. | Serial Number and subject in the Agenda | Decision of Council |
|---|---|---|---|
| 28.09.2018 | | 2018ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28–ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 04.30 மணிக்கு துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க சாதாரணக் கூட்டம்நடைபெறும்.<br>**தனி அலுவலர்,**<br>**துவாக்குடி நகராட்சி.** | |
| 28.09.2018 | 226 | <u>**பொருள் எண். 1**</u><br>துவாக்குடி நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலை அபிவிருத்தி திட்டம் – 2018-2019–ம் ஆண்டு நிதியின் கீழ் சாலைப்பணிகள் மேற்கொள்ள ரூ. 100 லட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்ட பிரேரனை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை–5 அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதன் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் மேற்படி பணிக்கு 100.00 இலட்சத்துக்கு தமிழ்நாடு நகர்புற சாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் (Turip – 0.46 + CGF – 0.30 + CFC- 0.14+ ULB – 0.10) நிர்வாக அனுமதி அளித்து செயல் முறை உத்தரவு கடிதம் (செயல் முறை ந.க.எண் 12981/2018/இ3 நாள் 31.07.2018) வரப்பெற்றதை தொடர்ந்து கீழ் கண்டவாறு சாலை பணிகள் மேற்கொள்ள குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி 19.09.2018 ம் தேதி கோரப்பட்டத்தில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**தமிழ்நாடு நகர்புற சாலை அபிவிருத்தி திட்டம் – 2018-2019**<br>**சிப்பம் – I** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | காட்டுமாரியம்மன் கோவில் தெரு, சமூக நலக்கூடம் சாலை மற்றும் முத்துராமலிங்க தேவர் சாலையில் தார்சாலை அமைத்தல், மற்றும் அய்யனார்கோவில் கிழக்கு மற்றும் மேற்கு பகுதி குறுக்குத் தெருக்கள், வசந்தம் நகர் 1, 2, 3 மற்றும் 4 தெருக்கள், பட்டம்மாள் கோவில் சந்து மற்றும் அண்ணாநகர் மெயின் மற்றும் குறுக்குத் தெருக்களில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் | 100.00 | M. Ponnusamy, No. 43, IAS Nagar, Thiruverumbur, Trichy 5.00% மதிப்பீட்டிற்கு அதிகம் | 5.00 % மதிப்பீட்டை விட அதிகம் கொடுத்துள்ள M. Ponnusamy, No. 43, IAS Nagar, Thiruverumbur, Trichy |
| | | | K. Jayaraman, No.17A, Post Office Street, MK. Kottai, Trichy 6.07% மதிப்பீட்டிற்கு அதிகம் | |

மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M. Ponnusamy, No. 43, IAS Nagar, Thiruverumbur, Trichy என்ற ஒப்பந்ததாரரும் மற்றும் K. Jayaraman, No.17A, Post Office Street, MK. Kottai, Trichy ஒப்பந்ததாரரும் கலந்து கொண்டனர். மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டு கவர் முறையில் பெறப்பட்டுள்ளது. இருவரும் தகுதி பெற்றுள்ளனர். மேற்கண்ட ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை (Price Bid) 26.09.2018 ம் தேதி அன்று மேற்படி ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது.

மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட திரு. M. Ponnusamy, No. 43, IAS Nagar, Thiruverumbur, Trichy என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 5%கூடுதலாகவும், திரு. K. Jayaraman, No.17A, Post Office Street, MK. Kottai, Trichy ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைவிட 6.07%கூடுதலாகவும் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார்.மேற்கொண்ட இரண்டு ஒப்பந்தகாரர்களும மதிப்பீட்டைவிட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள நிலையில் மேற்படி திட்டப்பணியாக உள்ளதால் குறித்த காலத்தில் செய்து முடித்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு. எம் பொன்னுசாமி ஒப்பந்தகாரர் அவர்களிடம் மதிப்பீட்டை விட 5% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதை குறைத்துதர இயலுமா என கடிதம் வாயிலாக 26.09.2018ம் தேதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஒப்பந்ததாரர் திரு.எம்.பொன்னுசாமி அவர்கள் தனது 27.09.2018 ம் தேதிய கடிதத்தில் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி வழங்கிய 5% இருந்து 4.75% குறைத்து வழங்கியுள்ளார் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : –**

| | | | |
|---|---|---|---|
| | | 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கு கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் M. Ponnusmay ஒப்பந்ததாரரை ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை குறைந்து கொடுக்க கோரி 26.09.2018ந் தேதியில் கடிதம் அனுப்பப்பட்டது (Negotiation letter). மேற்கண்ட ஒப்பந்ததாரர் கட்டுமானப்பொருட்களின் விலை உயர்வு மற்றும் வேலையாட்களின் கூலி உயர்வு காரணமாக 4.75% –க்கு தான் பணி மேற்கொள்ள இயலும் என ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை குறைத்து கொடுத்துள்ளார்.<br>3. மேற்கண்ட பணி திட்டப்பணி என்பதாலும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களால் வழங்கப்பட்ட நிர்வாக அனுமதி கடிதத்தில் தெரிவித்துள்ள கால கெடுவிற்குள் செய்து முடித்து பணி முடிவறிக்கை மற்றும் நிதி பயனீட்டுச்சான்றுகள் தயார் செய்து அரசுக்கு அனுப்புவதற்கு ஏதுவாக குறைந்த ஒப்புந்தப்புள்ளி M. Ponnusmay, ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 4.75% ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.<br>**ந.க. எண். 800 /2018/ இ1** | |
| 28.09.2018 | 227 | **<u>பொருள் எண். 2</u>**<br>2018–19ம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு நிதி (TURIP 2018–19) திட்டத்தின் கீழ் துவாக்குடி நகராட்சி பகுதியில் தார் சாலைகள் அமைத்தல் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு கடிதம் ந.க.எண். 12981/2018/இ3 நாள். 31.07.2018–ல் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதை தொடர்ந்து பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தினை 02.09.2018–ம் தேதி தி நியூ இன்டியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில தினசரி நாளிதழ் மற்றும் நமது அம்மா தினசரி தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு பிரைட் அட்வர்டைசிங் ஏஜென்சி, சென்னை நிறுவனத்தின் பில் பட்டியல் ரூ. 56,070/– தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க. எண். 800 /2018/ இ1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 28.09.2018 | 228 | **<u>பொருள் எண். 3</u>**<br>துவாக்குடி நகராட்சி பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–19 ன் கீழ் துவாக்குடி 7–வது வார்டு ராஜீவ் காந்தி மெயின்சாலை மற்றும் விஸ்தரிப்பு பகுதி மற்றும் 8–வது வார்டு பாரதிதாசன் தெரு குறுக்கு தெருவில் குடிநீர் குழாய் அமைத்தல் பணி செய்ய ரூ. 13.75 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி வரப்பெற்ற திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். அ3/1718/2018 நாள். 12.7.2018 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் பார்வையிட்டு பதியலாம்.<br>**ந.க.எண். 946/2018/இ1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>28.09.2018</td>
<td>229</td>
<td>
<u>பொருள் எண். 4</u><br>
துவாக்குடி நகராட்சி பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–19 ன் கீழ் துவாக்குடி ராவுத்தாண்மேடு பழத்தோட்டத்தில் சமுதாய கூடம் கட்டுவதற்கு ரூ. 50.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி வரப்பெற்ற திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். அ3/1718/2018 நாள். 16.8.2018 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br>
அலுவலக குறிப்பு : – மன்றம் பார்வையிட்டு பதியலாம்.<br>
ந.க.எண். 946/2018/இ1
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>28.09.2018</td>
<td>230</td>
<td>
<u>பொருள் எண். 5</u><br>
துவாக்குடி நகராட்சி பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–19 ன் கீழ் கீழ்கண்ட பணிகள் செய்ய 20.09.2018–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் விபரம்</th><th>மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப் புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>வார்டு எண். 7 ராஜீவ்காந்தி நகர் மெயின்சாலை மற்றும் வார்டு எண். 8 பாரதிதாசன் குறுக்குத் தெருவில் குடிநீர் குழாய் அமைத்தல்.</td><td>7.25</td><td>ஆர். சிவக்குமார்<br>எம். ஜீவானந்தம்</td><td>மதிப்பீட்டை விட 0.05 % குறைவு<br>மதிப்பீட்டை விட 1.67 % அதிகம்</td></tr>
<tr><td>2.</td><td>வார்டு எண். 7 ராஜீவ்காந்தி நகர் விஸ்தரிப்பு பகுதிகளில் குடிநீர் குழாய் அமைத்தல்.</td><td>6.50</td><td>ஆர். சிவக்குமார்<br>எம். ஜீவானந்தம்</td><td>மதிப்பீட்டை விட 0.07 % குறைவு<br>மதிப்பீட்டை விட 2.29 % அதிகம்</td></tr>
<tr><td>3.</td><td>வார்டு எண். 5 ராவுத்தாண்மேடு பகுதியில் சமுதாயக்கூடம் அமைத்தல்</td><td>50.00</td><td>எம். பொன்னுசாமி<br>ஆர். ஜெயராமன்</td><td>மதிப்பீட்டை விட 0.01 % குறைவு<br>மதிப்பீட்டை விட 2.82 % அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு : – குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்று வேலை உத்திரவு வழங்க அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண். 946/2018/இ1
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 28.09.2018 | 231 | **<u>பொருள் எண். 6</u>**<br><br>துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது சகாதார பணிகள் மேற்கொள்வதற்கு M/s SARAM ENVIRO SERVICES PRIVATE LIMITED நிறுவனத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண். 90/18.09.2017 ம் தேதிய அனுமதியின்படி 01.09.2017 ம் தேதி முதல் 31.08.2018 ம் தேதி வரை ஒரு வருட காலத்திற்கு கால நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது, தற்போது மேற்படி நிறுவனம் ஒரு வருட காலத்திற்கு மீண்டும் பணியினை நீட்டித்து தருமாறு விண்ணப்பம் சமர்பித்துள்ளனர். எனவே மேற்படி நிறுவனத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ந.க.எண். RC. J3/8631/2017 நாள். 29.08.2017 ம் தேதிய தினக்கூலி நிர்ணயம் செய்யப்பட்ட உத்திரவின் அடிப்படையில் கூலித்தொகை வழங்கவும், மேலும் 01.09.2018 ம் தேதி முதல் 31.082019 ம் தேதி வரை ஒரு வருட காலத்திற்கு மட்டும் ஏற்கனவே வழங்கப்பட்ட இதே எண்ணிட்ட 01.09.2017 ம் தேதிய உத்திரவில் கண்டுள்ள நிபந்தனைகள் அடிப்படையில் SARAM ENVIRO SERVICES PRIVATE LIMITED நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கவும், ஒரு வருட காலத்திற்கு உத்தேச செலவினம் ரூ. 90,00,000/– த்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**ந.க.எண். 13/2011/எச்1**<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம். | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 28.09.2018 | 232 | **<u>பொருள் எண். 7</u>**<br>துவாக்குடி நகராட்சி 2017–18 –ம் ஆண்டு நிர்வாக அறிக்கை தயார் செய்யப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் பார்வையிட்டு பதியலாம்.<br><br>**ந.க.எண். சி1 / 677 / 2018** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 28.09.2018 | 233 | **<u>பொருள் எண். 8</u>**<br>துவாக்குடி நகராட்சி 7–வது வார்டு பாரதிதாசன் தெரு, 8–வது வார்டு வ.உ.சி நகர், 9–வது வார்டு இம்மானுவேல் நகர் மற்றும் 11–வது வார்டு வாய்க்கால் மேடு பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய் அமைக்கும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 1,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** 1920 தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–ன் கீழ் செலவினத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 1020 / இ1 / 2018** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 28.09.2018 | 234 | **<u>பொருள் எண். 9</u>**<br>பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டம் 2017–18 –ன் கீழ் துவாக்குடி நகராட்சி பகுதியில் திருச்சி – தஞ்சை தேசிய நெடுஞ்சாலையில் துவாக்குடி பேருந்து நிறுத்தத்தில் நிழற்குடை (Bus Roof Top) அமைக்க கட்டிட வடிவமைப்பு வரைபடம் தயார் செய்து கொடுக்க தேசிய தொழில் நுட்ப கழகம், துவாக்குடியிலிருந்து வரப்பெற்ற பில்பட்டியல் எண். 169 நாள். 17.9.2018–ன் படி தொகை ரூ. 17700/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**ந.க.எண். 916/2017/இ1**<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம். | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 28.09.2018 | 235 | **<u>பொருள் எண். 10</u>**<br><br>தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் கொள்ளிடம் பஞ்சக்கரை பகுதியில் அமைந்துள்ள தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து துவாக்குடி நகராட்சி பகுதியிலுள்ள நான்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு குடிநீர் ஏற்றப்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் 16.08.2018 ம் தேதியன்று காவேரி ஏற்பட்ட வெள்ளத்தினால் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்த பிரதான குடிநீர் விநியோக குழாய்களை தாங்கி இருந்து தூண்கள் பழுதடைந்த காரணத்தினால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் வழங்கப்படும் குடிநீர் முற்றிலும் நிறுத்தப்பட்டது, இதனால் நகராட்சி பகுதியில் உள்ள பொது மக்களுக்கு அன்றாட அத்தியாவசிய தேவையான குடிநீரினை வழங்க இயலவில்லை, எனவே நகராட்சி பகுதியில் வசிக்கும் பொது மக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகளின்படி குடிநீர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யவும், மேலும் இப்பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் குறைந்த விலைப்புள்ளி அளித்த VPS வாட்டர் சர்வீஸ், திருவெறும்பூர் நிறுவனத்தின் மூலம் நடை ஒன்றுக்கு ரூ. 3500/– (12000 லிட்டர் வீதம் ) 16 நடை (192000 லிட்டர் வீதம்) குடிநீர் வழங்கியதற்கு தொகை ரூ. 56000/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 1311 / இ1 / 2018** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 28.09.2018 | 236 | **<u>பொருள் எண். 11</u>**<br>துவாக்குடி நகராட்சி அலுவலக JCB வாகனம் TN45 BY 2588 வண்டிக்கு ஆயில் சர்வீஸ் மற்றும் உதிரிபாகங்கள் மாற்றி சர்வீஸ் செய்திட மற்றும் லேபர் கட்டணம் உட்பட செலவினம் ரூ. 90000/– க்கு அனுமதியும் மேற்கண்ட வாகனத்தின் அரசு அங்கீகாரம் பெற்ற விற்பனையார் ஜெயராஜ் ஆட்டோ மொபைல் நிறுவனத்தின் மூலம் செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –**<br>JCB வாகனத்தின் ஆயில் சர்வீஸ் செய்து பராமரிப்பது அவசிய பணியாக இருப்பதால் ஒப்புதல் வழங்கலாம்.<br>**ந.க.எண். 1366 / இ1 / 2018** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 28.09.2018 | 237 | **<u>பொருள் எண். 12</u>**<br>துவாக்குடி நகராட்சிக்கு சொந்தமான நான்கு வாகனங்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி ஊதியம் மூலம் ஓட்டுநர்கள் அமர்த்தி கொண்டு ஊதியம் வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 6,40,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>** – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 284 / எச்1 / 2017** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 28.09.2018 | 238 | **<u>பொருள் எண். 13</u>**<br>தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2018-19 -ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை எண். 34, அறிவிப்பு எண்.14-ல், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic vending centre) நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது<br>என்பதிற்கிணங்க, துவாக்குடி நகராட்சியில் உள்ள 21 வார்டுகளில் 6 வார்டுகள் பாரத மிகுமின் நிறுவன பராமரிப்பில் உள்ளது போக மீதமுள்ள 15 வார்டுகளில் 10 வார்டுகளிளில் மட்டும் தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் பொது கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணற்று நீரை ஆதாரமாக கொண்டு தீவிர வடிகட்டுதல் மற்றும் எதிர் சவ்வூடு பரவல் முறையில் சுத்திகரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கும் வண்ணம் சுத்திகரிக்கும் இயந்திரம் நிறுவ ஏற்படும் செலவினத் தொகை ஒன்றுக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.18.00 இலட்சம் (ரூபாய் பதினெட்டு இலட்சம்) வீதம் மொத்தம் 10 வார்டுகளில் ரூ. 118.00 இலட்சம் (ரூபாய். நூற்று பதினெட்டு இலட்சம் ) ஆகும். | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

இத்திட்டத்தை நிறைவேற்ற மூலதன செலவினத்தை தனியார் தொழில் நிறுவனம் / தொழில் முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், இயக்குதல் பராமரித்தல் செலவினத்தை பயனாளிகளிடம் இருந்து பெறப்படும் கட்டணத்தில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், மின் கட்டணத்தை தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் செலுத்தவும், நகராட்சி மூலம் இடம் மற்றும் நீர் ஆதாரம் மட்டும் வழங்க திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே, நகரில் உள்ள 21 வார்டுகளில் 10 வார்டுகளுக்கு மட்டும் வார்டுக்கு 1 வீதம் தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centres) தனியார் தொழில் நிறுவனங்கள் / தொழில் முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையிலிருந்து ஈடு செய்து கொள்ளவும், மேலும், அனுபவம் வாய்ந்த மற்றும் உரிய தொழில் நுட்ப நுணுக்கங்களை கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய ஏதுவாக, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் “Expression of Interest” விளம்பரம் செய்து தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்யவும் அனைத்து கீழ்க்கண்ட வார்டுகளிலும் செயல்படுத்தவும், இதற்கான அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி பெறவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **வார்டு எண்** | **சுத்திகரிப்புநிலையம் அமைக்கதேர்ந்தெடுக்கப்பட்டஇடம்** |
|---|---|---|
| 1 | 2 | பால் சொசைட்டி அருகில் |
| 2 | 5 | பெல்நகர் நுழைவு பகுதி |
| 3 | 6 | துவாக்குடி பேரூந்து நிலையம் |
| 4 | 7 | பெரியார் தெரு |
| 5 | 8 | வ.உ.சி நகர் பூங்கா |
| 6 | 9 | மணியம்மை நகர் |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>7</td><td>10</td><td>மகாத்மா காந்தி தெரு</td></tr>
<tr><td>8</td><td>11</td><td>அம்பேத்கார் தெரு</td></tr>
<tr><td>9</td><td>12</td><td>அக்பர் சாலை, கடைவீதி</td></tr>
<tr><td>10</td><td>13</td><td>அய்யம்பட்டி மெயின்ரோடு</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u> – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண். 1332 / இ1 / 2018
</td>
<td></td>
</tr>
<tr>
<td>28.09.2018</td>
<td>239</td>
<td>
<u>பொருள் எண். 14</u><br>
துவாக்குடி நகராட்சியில் 2018–19ம் ஆண்டிற்கு பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் விபரம்</th><th>மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>துவாக்குடி நகராட்சி அலுவலக வளாகத்தில் இ–சேவை மையம் கட்டுதல்</td><td>9.90</td></tr>
<tr><td>2</td><td>துவாக்குடி நகராட்சி அலுவலக வளாகத்தில் பாதுகாப்பு சுற்றுச்சுவர் கட்டுதல் மற்றும் கழிப்பிடம் மராமத்து பணி செய்தல்</td><td>9.80</td></tr>
</table>
அலுவலக குறிப்பு : – ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண். 1169 /2018/ இ1
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

_____________ X _____________